உடல் ரீதியான தண்டனை உங்கள் குழந்தை மற்றும் குடும்பத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம்



ஹரோ கவுன்சில் சிறார்களுக்கு ஆதரவளித்து, அவர்கள் பாதுகாப்பாக தமது முழுத் திறமையை எட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களது சமூகங்களுகளுடன் இணைந்து செயலாற்றி அவர்களுக்கு கற்பிக்க உறுதிபூண்டுள்ளது.

நேரத்துக்கு நேரம் அனைத்துப் பெற்றோர்களும் அழுத்தத்துக்கு உள்ளாவார்கள். அதன் காரணமாக அவர்கள் கோபாவேசத்துக்கும் இட்டுச் செல்லலாம். எனினும் உடல் ரீதியான தண்டனை என்பது உங்கள் பிள்ளைகளை சீர்படுத்த காத்திரமான ஒரு வழியாக இருக்காது.

``கசையடி`` அல்லது வேறு `` உடல் ரீதியான``` தண்டனை என்பது, எவ்வளவு மென்மையாக இருந்தாலும் ஓரளவு வலி, அசௌகரியம் ஆகியவற்றை ஏற்படுத்தும் ஒரு தண்டனையாகும். இது பெரும்பான்மையானவை அடிப்பாதாகும் (``சவுக்கடி, ``கன்னத்தில் அறைதல்``, ``பிட்டத்தில் அடித்தல்``). இது பெரும்பாலும் சிறார்களை கையாலோ அல்லது சவுக்கு, தடி, பெல்ட், காலணி, மரத்தாலான கரண்டி மற்றும் இதரவையால் அடிப்பதாகும். எனினும் இதில் உதைப்பது, உலுக்குவது அல்லது சிறார்களை வீசி எறிவது, பிராண்டுவது, கிள்ளுவது. கடிப்பது, முடியைப் பிடித்து இழுப்பது அல்லது காதை முறுக்குவது, சிறார்களை அசௌகரியமான சூழலில் இருக்க வைப்பது, தீக்காயம் ஏற்படுத்துவது, சூடு வைப்பது, அல்லது வலிந்து உட்கொள்ள வைப்பது (சிறார்களின் உரிமைக்கான 2006 குழு). வயது வந்த மற்றொருவரை உங்கள் குழந்தைக்கு வேதனையை உண்டாக்கச் செய்வதும் குற்றமாகும்.

உங்கள் குழந்தையின் மீது ஏற்படும் 5 முக்கியத் தாக்கங்கள்

உடல் ரீதியாக

- நேரடியாக உடல் ரீதியான தீங்குகள்: வெட்டுகள், சிராய்ப்புகள், தோல் சிவந்து போதல், உராய்வுகள், வீக்கம், எலும்பு முறிவுகள்.

அறிவாற்றல்

- வீட்டுப்பாடம் செய்வதற்காக உங்கள் குழந்தையை அடிப்பது, வீட்டுப்பாடத்தின் மீது பதற்றத்துக்கும், விரக்திக்கும் இட்டுச் செல்லலாம். இது கற்றலுக்கு தடையாகவும் அமையக் கூடும்.
- பாடசாலையில் குறைந்த கவனம்.
- உங்கள் குழந்தையின் கல்வி பாதிக்கப்பட்டு அவர்களுக்கு அபிலாஷைகலும், எதிர்காலத் தெரிவுகளும் மட்டுப்படுத்தப்படலாம்.

Harrow COUNCIL LONDON

உணர்வு ரீதியாக

- மனரீதியான தீங்கு: பதற்றம், தனிப்படுத்தல், சுயமரியாதைக்கு பாதிப்பு, தன்னம்பிக்கைக் குறைவு, மன அழுத்தம் மற்றும் சுய-தீங்கு ஏற்படுத்திக் கொள்ளும் நடவடிக்கை
- உணர்வுகளை வெளிப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்தலில் சிரமங்கள் மற்றும் மற்றவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளுதல்
- அடிப்பதை நீங்கள் அவர்களை நேசிக்கவில்லை என்பதற்கான அறிகுறி என்று குழந்தைகள் அர்த்தம் கொள்ளலாம். உடல் ரீதியான தாக்குதல் எதிர்காலத்தில் பிள்ளைகள் உங்களை புறக்கணிக்க வழிசெய்து, அது உங்கள் குடும்ப உறவுகளை நீண்டகால அடிப்படையில் பாதிக்கலாம்

நடத்தை ரீதியாக

- வன்முறை சரி என்று ஏற்றுக் கொள்வது : வன்முறை பயன்படுத்தப்படும் சூழலில் பிள்ளைகள் வளர்க்கப்பட்டால், அது சரி என்று அவர் எண்ணக் கூடும்.
- சிறார்களை அடித்தால், அவர்கள் திருப்பி அடிக்கலாம் மற்றும் அச்சம் கொள்ளலாம், ஆனால் உங்களை மதிக்க மாட்டார்கள்.
- சிறார்களிடையே அதிகரித்த மூர்க்கத்தனம் : உடன்பிறப்புகள் மற்றும் நன்பர்களுடன் சண்டையிடுவது, மோதல்களில் வன்முறையைப் பயன்படுத்துவது, தன் மீது கவனத்தை ஈர்க்கும் நடவடிக்கை.
- அடிக்கப்படும் சிறார்கள் தமது தவறான நடவடிக்கைக்காக தண்டிக்கப்பட்டிருக்கிறோம் என்று கருதி, மீண்டும் தவறாக நடக்க தடையில்லை என்று உணர்வர்.. எதிர்காலத்தில் தவறான நடவடிக்கைகளை தடுக்க, வருந்துவது அவசியம் எனும் உணர்வை சிறார்களிடமிருந்து நீக்கிவிடக் கூடும்.

குற்ற எண்ணம்:

- உடல் ரீதியான தண்டனை நற்பண்புகள் உள்வாங்கப்படுவதை தடுத்து, அதிகாரம் கொண்டவர்கள் மீது மோதல் உணர்வை வளர்க்கும்.
- அதிகரித்த சமுக விரோத நடவடிக்கையில் ஈடுபடும் அபாயம். இது உங்கள் குழந்தை குற்றச்செயல்பாட்டு ஆவணத்தில் பதியப்பட வழி செய்யும், அது அவர்களது எதிர்காலம் முழுவதையும் பாதிக்கக் கூடும்.
- வளர்ந்த பிறகு அதிகரிக்கும் வன்முறை மற்றும் குற்றச் செயல்பாட்டு நடவடிக்கை. இதில் வீட்டு வன்முறையும் அடங்கும்.

Harrow COUNCIL LONDON

உடல் ரீதியான தண்டனை என்பது, வலிந்து உங்கள் குழந்தையை ஏதாவது தவறுக்காகவோ அல்லது நிங்கள் விரும்பும் செயலை அந்தக் குழந்தையைச் செய்ய வைப்பதற்கோ பயன்படுத்துவதாகும் (அதாவது வீட்டுப்பாடம்)

சிறார்களை அடிப்பதையோ அல்லது உடல் ரீதியாக தண்டிப்பதையோ நியாயப்படுத்த முடியாது. கடுமையான தண்டனைகள் பிரச்சினைகளை மேலும் மோசமாக்கும்.

பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்க்க வேறு பல பிள்ளை வளர்ப்பு உத்திகள் உள்ளன. ஆக்கபூர்வமான உத்திகள் குறுகிய மற்றும் நீண்டகால அடிப்படையில் உங்கள் குழந்தையுடனான உறவை பலப்படுத்தலாம்.

உங்கள் குழந்தையை உடல் ரீதியாக சாடுவது, அது காயத்தை ஏற்படுத்தினாலும் இல்லையென்றாலும் சரி, அச்செயல் குற்றமாகும். நீங்கள் பொலிசாரால் விசாரிக்கப்படலாம், உங்களை எச்சரிப்பதா அல்லது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முன்னர் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்படலாம். நீங்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டால், அதன் காரணமாக அபராதம், சமூக சேவை அல்லது சிறைவாசம் விதிக்கப்படலாம். இதையடுத்து குற்ற ஆவணக் குறிப்புகளில் நீங்கள் இடம்பெறுவீர்கள். இது உங்களது வேலை மற்றும் பயணங்களில் தடையை ஏற்படுத்தலாம்.

பொதுவானத் தாக்குதல் (குற்றவியல் சட்டம் 1988) அதிகபட்ச சிறை தண்டனை 6 மாதங்கள்

உடல் ரீதியான தீங்களை ஏற்படுத்தும் தாக்குதல் (தனி நபர்கள் மீதான தாக்குதல் சட்டம் 1861)- ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை

காயம் ஏற்படுத்துதல் அல்லது கடுமையாக உடல் ரீதியான தீங்கை ஏற்படுத்துதல் (தனி நபர்கள் மீதான தாக்குதல் சட்டம் 1861)- ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை

பெற்றோர்களுக்கு ஹரோவில் ஏராளமான உதவிகள் கிடைக்கும்::

1) பிள்ளை வளர்ப்பு குறித்த அறிவுரை மற்றும் ஆதரவுக்கு, நீங்கள் முதற்கட்டமாக உங்கள் பிள்ளையின் பாடசாலை அல்லது உள்ளூர் சிறார் மையத்துடன் உரையாடலாம்.
2) பிள்ளை வளர்ப்புகான திட்டம் உட்பட அதற்கான ஆதரவு, நேரடியாக வந்து பங்கேற்கும் அமர்வுகள் ஆகியவற்றை முன்னெடுக்க எமது ஆரம்பகட்ட தலையீட்டுச் சேவைக்கான எமது மேஷ் குழுவை 0208 901 2690 எனும் இலக்கத்தில் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
3) உங்கள் குழந்தை குறிப்பிடத்தகுந்த தீங்கை எதிர்கொள்ளும் அபாயம் இருப்பதாக நீங்கள் கவலையடைந்தால், நீங்கள் **அவசியம்** ஹரோ சிறார்கள் சேவையை 0208 901 2690 எனும் இலக்கத்தில் தொடர்பு கொள்ள வேண்டும், (அலுவலக நேரத்துக்கு வெளியே : 0208 424 0999)